Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 112/2023

**Deposition of P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | முத்துச்சாமி |
| Father's Name | : | மலையாண்டி |
| Village | : | கள்ளுவிடுதி |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.02.2024**

(1 முதல் 5 வரையான எதிரிகள் நீதிமன்றத்தில்ஆஜர்.)

<u>முதல்விசாரணை</u>

நான் கள்ளுவிடுதி கிராம்த்தில் வசித்து விவசாயம் வருகிறேன். எனக்கு எழுதபடிக்க தெரியாது. நான் எங்கள் வீட்டில் 7 ஆடுகள் வளர்த்து வந்தேன். அதில் நான் வளர்த்து வந்த 3 பெட்டை ஆடுகள் காணாமல் போய்விட்டது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. என் வீட்டின் முன்பாக ஒருநாள் மாலை சுமார் 5-6 மணியளவில் ஆடுகளை கட்டி வைத்துவிட்டு இரவில் தூங்கிவிட்டோம். மறுநாள் காலை சுமார் 4 மணியளவில் எழுந்து பார்த்தபோது எங்களது ஆடுகளில் 3 பெட்டை ஆடுகளை காணவில்லை. காணாமல் போன ஆடுகளை அருகிலுள்ள கெடாரம்பட்டி, மணவிடுதி, கம்மங்காடு ஆகிய இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனவே சம்பவத்திலிருந்து 2 நாட்கள் கழித்து சம்மட்டிவிடுதி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். என்னிடம் படித்து காண்பித்தார்கள் நான் அதில் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் நான் அளித்ததுதான். **சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். புகார் கொடுத்து போலீசார் விசாரித்து திருடுபோன எனது 3 ஆடுகளை சுமார் 2 மாதங்கள் கழித்து கண்டுபிடித்ததாக தகவல் சொன்னார்கள். காவல்நிலையம் சென்று எனது ஆடுகளை அடையாளம் காண்பித்தேன். நீதிமன்றத்தில் மனு செய்து நீதிமன்ற உத்தரவின்பேரில் சம்மட்டிவிடுதி காவல்நிலையத்திலிருந்து எனது 3 ஆடுகளை பெற்றுச்சென்றேன். **என்னிடம் காட்டப்படும் (ஆர்.பி.எண் 89/2023 ) புகைப்பட்த்திலுள்ள 3 ஆடுகள் எங்களுடையதுதான்.** 3 ஆடுகளை காட்டும் **(ஆர்.பி.எண் 89/2023 ) புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**1-5** எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எங்களது வீட்டில் மொத்தம் 7 ஆடுகள் வளர்த்தோம். ஆடுகள் காணாமல் போனது தொடர்பாக யார் யாரை விசாரித்தேன் என்றால் பக்கத்து ஊர்களில் சென்று அங்குள்ளவர்களை விசாரித்தேன். அவர்களது பெயர் தெரியவில்லை.

சம்பவம் நடந்ததிலிருந்து எத்தனை நாட்கள் ஆடுகளை தேடிப்பார்த்தேன் என்றால் 2 நாட்கள் தேடிப்பார்த்தேன். அ.சா.ஆ.1 புகார் மனுவிலுள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். புகார் அளிக்க நான் மட்டும் காவல்நிலையம் சென்றேன். நான் சொல்வதுபோல் எனது ஆடுகள் காணாமல் போகவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் புள்ளிவிபர கணக்கிற்காக என்னிடம் ஒரு புகாரை பெற்றுக்கொண்டு அதன்பேரில் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>